# பவுல்-பர்னபாவைப் போல ஒரு குழுவுடன் நமது கர்த்தருக்கு சேவை செய்வோம்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் T2b யை படிக்கவும்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, இயேசுவையும் அப்போஸ்தலர்களையும் போல முயற்சிகளை ஒன்று சேர்த்து ஒரு குழுவாகத் தொண்டாற்ற முடியும் என நம்பும் எங்களுக்கு உதவுவீராக."

தற்போதைய தேவைகளுக்கும், வட்டார பழக்க வழக்கங்களுக்கும், விசுவாசிகளுக்கு தேவன் தந்துள்ள வரங்களுக்கும் பொருத்தமான நடவடிக்கைகளைத் தேர்ந்து கொள்க.

1. **பணிக்குழுவாக இணைந்து சேவை செய்யுமாறு விசுவாசிகளுக்கு உதவ தேவ வார்த்தையால் ஆயத்தப்படுக.**

### 1 (அ) பர்னபா ஒரு குழுப்பணியாளர்

பர்னபா மற்றவர்களின் தேவைகளுக்காக கவனம் எடுத்துக்கொண்டு, ஒரு குழுவாக பணியாற்ற மக்களை ஒருங்கிணைத்தார். இல்லாதவர்களுக்கு அளிக்க அவர் என்ன செய்தார் என்பதை **அப். 4:34-37** ல் காண்க.

பவுலை ஒரு உடன் ஊழியராக எருசலேம் விசுவாசிகள் ஏற்றுக்கொள்வதற்கு எவ்வாறு உதவினார் என்பதை **அப். 9:26-29** ல் காண்க.

அந்தியோகியா சபை பர்னபாவுடன் அனுப்பிய இரண்டு குழு உறுப்பினர்களை **அப். 13:2-5** ல் காண்க.



*அப்போஸ்தலர்கள் பொதுவாக இரண்டு பேர் அல்லது சிறு குழுவாக பயணம் செய்தனர்*

### 1. ஆ) வேதாகமத்தில் குழு மற்றும் தனி முயற்சிகள்

**மோசே** இஸ்ரவேல் கோத்திரங்களின் மூப்பர்களுடன் நெருங்கி நின்று பணியாற்றினான். தேவன் அவனை வல்லமையாக பயன்படுத்தினார். ஆனால் அவன் தனியாக செயல்பட்டபோது மக்கள் அவனை வருத்தப்படுத்தினர். தேவன் தண்ணீர் உண்டாக்கும் என்று வாக்குத்தத்தம் செய்த கன்மலையை கோபத்துடன் அடித்தான் (எண். 20:2). தேவன் அவனைத் தண்டித்தார்.

**தாவீது** வீரர்களுடனும், ஆசாரியர்களுடனும், தீர்க்கதரிசிகளுடனும் இணைந்து பணியாற்றிய போது தேவன் அவனை வல்லமையாக பயன்படுத்தினார். ஆனால் தனியாக இருந்த போதோ உரியாவின் மனைவியை எடுத்துக்கொண்டான். தேவன், அவனைத் தண்டித்தார் (2 சாமு. 11-12). தனியாக செயல்பட்ட போது, வட மற்றும் தென் கோத்திரங்களின் பலத்தை அறிய இராணுவ வயதில் உள்ளவர்களின் கணக்கை எடுத்தான். தேவன் அவனைத் தண்டித்தார் (2 சாமு. 24).

**யோசபாத்** இராஜா பண்டைய இஸ்ரவேலின் தேவ தீர்க்கதரிசிகளை ஆலோசித்தே முடிவுகளை எடுத்தான். கிராமங்களில் தேவ வார்த்தையைப் போதிக்க அதிகாரிகளின் குழுவை அனுப்பினான் (2 நாளா. 17:7-9). ஆனால் மற்ற இராஜாக்கள் தனியாக செயல்பட்டனர். முட்டாள்தனமான முடிவுகளை எடுத்தனர். உதாரணமாக யோசபாத்திடம், ஆகாப், தான் யுத்தத்தில் வேஷமாறி இருக்கப்போவதாக கூறினான். (1 இராஜா 22:30-38). அவன் வெட்கக்கேடான மரணத்தை அடைந்தான்.

**எலியா தீர்க்கதரிசி,** தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட தீர்க்கதரிசிகள் அடங்கிய ஒரு பணிக்குழுவோடு செயல்பட்டான். ஆனால் தீமைக்காரியான இராணி யேசபேலுக்கு பயந்து ஓடியபோது அவன் ஞானமில்லாமல் தன் வேலைக்காரனை விட்டுவிட்டு தனியே ஓடினான். சோர்வடைந்த தன் உயிரை எடுத்துப் போடுமாறு தேவனிடம் வேண்டினான். (1 இராஜா 19).

**இயேசு** 12 பேர் கொண்ட ஒரு அப்போஸதலர் குழுவை ஊருவாக்கினர். பின்னர் பேதுரு இதற்குத் தலைவர் ஆனார். இயேசுவைக் கைது செய்தபின் அவர்கள் சிதறி ஓடினர். அவர்களிடம் இருந்து பிரிந்த பின் பேதுரு இயேசுவை மறுதலித்தார் (மாற்கு 14:66-72).

**பவுல்:** கைதியாக இருந்த நேரத்தை தவிர மற்ற சமயங்களில் எல்லாம் பிற ஊழியர்களுடனேயே பயணம் செய்தார். அவரது குழு உறுப்பினரான தீத்து இல்லாத போது வருத்தம் அடைந்தார் (2 கொரி. 2:13-13). பின்னர் பணிக்குழுவில் தீத்து சேர்ந்து கொண்ட போது ஆறுதல் அடைந்தார். (2 கொரி 7:5-7).

கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் பொதுவாக தனித்து பணியாற்றவில்லை. மாறாக அவர்கள் **தற்காலிகக் குழுக்களை** அமைத்துக் கொண்டனர்.

- இந்தக் குழுக்கள் பணிக்குழுக்கள், ஒரு குறிப்பிட்ட பணியை நோக்கமாகக் கொண்டன.
- குறிப்பிட்ட பணி முடிவடைந்ததும், அவை பெரும்பாலும் வேறு உறுப்பினர்களுடன் தொடர்ந்து வேறு பக்கம் முன்னேறியது.
- அவர்கள் தங்கள் குழு உறுப்பினர்களை பயிற்றுவித்தனர். பின்னர் இவர்கள் தங்கள் குழுக்களை அமைத்துக் கொண்டனர்.

### 1 இ) அந்தியோகியா குழு (பர்னபா, பவுல், யோவான் (மாற்கு), சில காலம்

ஓர் அப்போஸ்தலப் பணிக்குழு எவ்வாறு உருவாகியது, என்ன செய்தது என்பதை **அப். 13 & 14** ல் காண்க.

- அந்தியோகியா சபை ஓர் அனுப்பும் சபையாக மாற தேவன் செய்த உதவி என்ன என்பதை அப். 13:1-3 ல் காண்க.
- பணிக்குழுவை எதிர்த்த பல வகையான மக்களும் விளைவுகளும் பற்றி அப். 13 & 14 ல் காண்க
- புதிய சபைகளில் இந்த பணிக்குழு தலைவர்களை எவ்வாறு ஏற்படுத்தியது என்பதை அப். 14 ல் காண்க.
- தங்களை அனுப்பிய சபைக்கு என்ன நிகழ்ந்தது என்பதை எவ்வாறு அறிவித்தனர்? அப். 14:26-28 ல் காண்க.

### 2. ஒன்றாக செயல்படும் பணிக்குழுக்களை அமைப்பது பற்றி உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக

- எபே. 4:11-12 ல் வாக்குத்தத்தம் செய்தபடி தேவன் உங்கள் சபைக்கு அப்போஸ்தலராக சேவை செய்யுமாறு தந்துள்ள பணியாளர்களை ஆயத்தப்படுத்த உதவி செய்யுமாறு ஜெபிக்கவும்.
- பவுல் தன் ஊழியத்தை ஆரம்பிக்கவும், தனது சபை அனுப்பும் சபையாக மாறவும் உதவிய பர்னபா உங்களில் யார் என்பதை உங்கள் உடன் ஊழியர்களுடன் ஆலோசித்து தீர்மானிக்கவும். ஜெபித்து அவர்கள் மேல் கைகளை வைக்கவும்.
- ஓர் அப்போஸ்தல பணிக்குழுவுக்காக பிற சபைகளுடன் ஒத்துழைக்கவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

பர்னபாவின் குணநலன்களை **விவரிக்கவும்.** ஒரு குழுவைக் கட்ட தேவன் எவ்வாறு அவனை பயன்படுத்தினார்? (மேலே, பகுதி 1 அ).

அந்தியோகியா பணிக்குழு எவ்வாறு அமைந்தது என்ன செய்தது என்பதைக் கூறவும் அல்லது நடித்துக் காட்டவும் (1 இ, மேலே).

இயேசுவைப் பற்றி கூறவும், புதிய சபைகளை அமைக்கவும் சமீபத்தில் உங்கள் சமுதாயத்தை விட்டு ஒரு பணிக்குழு சென்றிருந்தால் அதன் **அறிக்கையைக்** கேட்கவும்.


**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்தவற்றை வழங்கட்டும்.

இந்த வாரத்தில் நீங்கள் திட்டமிட்டுள்ள நடிவடிக்கைகளை அறிவிக்கவும் (மேலே, பகுதி 2).

**கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கு முன் அவரவர்கள் தங்கள் பாவங்களை தேவனிடம் தனிப்பட்ட முறையில் அறிக்கை இடுமாறு செய்யவும். பின் யாராவது எண். 9:1-14 ல் உள்ள கதையைக் கூறட்டும். பஸ்கா பண்டிகைக்கும் கர்த்தருடைய பந்திக்கும் உள்ள ஒற்றுமையை விளக்கவும்.

ஜெபிக்கவும், ஊக்கப்படுத்தவும், புத்தி சொல்லவும், ஒருவரை ஒருவர் திருத்தவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும். சபை ஸ்தாபனக் குழுவிற்காக (இருக்கும் அல்லது இனி அமைக்கப் போகும்) ஜெபிக்கவும்.

**மனன வசனம்:** நீதி. 11:14.



தங்கள் முதல் ஊழியப் பயணத்தில் சேருமாறு யோவானை (மாற்கு) பவுலும் பர்னபாவும் வரவேற்றனர்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net